DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 95/2026
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | இலக்கியா |
| Father / Husband Name | சக்திதாசன் |
| Village | பருக்கல் |
| Taluk | செய்யூர் |
| Age | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26**.05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பருக்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி ஞாபகம் இல்லை. 2025 ம் வருடம் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் ஆஜர் எதிரி ரங்கன் என் கணவருக்கு போன் செய்து போலிஸ் அவரை தேடுவதாக கூறியதாக என் கணவர் என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 12.11.2025 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நாங்கள் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் என் கணவரை அசிங்கமாக பேசி அடித்தார்கள் என்றால் ஆமாம். நான் சத்தம் கேட்டு தடுக்க வந்த போது ஆஜர் எதிரிகள் என்னை தெவிடியா நீ வாடி என்று அசிங்கமாக பேசி என் நைட்டியை பிடித்து கிழித்து என்னை கையால் அடித்தார்களா என்றால் ஆமாம். ஆஜர் எதிரிகள் இருவரும் எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார்களா என்றால் இல்லை. மேலே சொன்ன விவரங்களை தான் நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. புகார் நான் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் நவம்பர் மாதம் காலை 12.00 மணிக்குள் கொடுத்தேன். என்னை போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். வேறு எங்கும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன விவரங்களை போலிசார் எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். போலிசார் வேறு யாரையாவது என்னுடன் விசாரித்தார்ளா என்றால் இல்லை. என்னை மட்டும் தான் விசாரித்தார்கள். நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக தாக்கல் செய்துள்ள மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும் என் கணவரும்

S. Ilakkiya

எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதால் எதிரிகள் என்னை அடித்ததாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் ரங்கன் என்பவர் மூலமாக எனது கணவரை கேட்டுக்கொண்டதை அறிந்து நான் அதைபற்றி காவல் நிலையத்தில் சென்று கேட்டபோது அவர்கள் மேற்படி விவரத்தை என்னிடம் கூறியதால் எதிரி மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S. Ilakkiya

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
26/5/21
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 95/2026
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சக்திதாசன் |
| Father / Husband Name | குமார் |
| Village | பருக்கல் |
| Taluk | செய்யூர் |
| Age | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 26.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பருக்கல் கிராமத்தில் வசித்து AC மெக்கானிக்கா வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி ஞாபகம் இல்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் திருவிழாவின் போது நான் மது குடித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக என் மனைவி காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 12.11.2025 ஆம் தேதி காலை 7.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி ரங்கன் எனக்கு போன் செய்து உன்னை போலிசார் தேடுவதாக கூறினார் என்றால் இல்லை. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு நானும் என் மனைவியும் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் என் வீட்டிற்கு வந்து எனது கழுத்தை பிடித்து நெரித்து என்னை கையால் அடித்தாரா என்றால் இல்லை. இதை தடுக்க வந்த என் மனைவியை ஆஜர் எதிரிகள் அசிங்கமாக பேசி நைட்டியை பிடித்து கிழித்து அவரை கையால் அடித்தார்களா என்றால் இல்லை. மேலே சொன்ன விவரங்களை தான் நான் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டு அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

26/5/26

Judicial Magistrate No.II
Madurantakam